# பதவிகள் - வெற்றிடம்

## சட்ட மா அதிபர் திணைக்களம்

தற்காலிக பதில் அரச சட்டவாதி பதவிகள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இதற்கான விண்ணப்பப்பத்திரங்களை கொழும்பு 12, சட்டமா அதிபர் திணைக்கள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(அ) **சம்பள அளவு.**- 28,095 (மாதாந்தம்) ;

(ஆ) **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**- இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும் ;

(இ) **ஆட்சேர்ப்பு முறை.**- இப்பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட புள்ளிகள் வழங்கும் முறைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் விதந்துரைப்புக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்ப தாரிகள் உரிய துறையில் பெற்றுள்ள தகைமைகள், செயலாற்றுகை, அனுபவம் மற்றும் ஆற்றல் போன்றவை கவனத்தில் கொண்டு தகைமையான விண்ணப்பதாரிகள் தெரிந்தெடுக்கப்படுவர்.

(ஈ) கடமையில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள்.- இப்பதவி நிரந்தரமற்றதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதற்றதுமாகும்.

விண்ணப்பப்பத்திரங்கள் 2011, மாச்சு மாதம் 14 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு முன்னர் கொழும்பு 12, சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

அமைச்சரவையின் கட்டளைக்கமைய,

லலித் வீரதுங்க,
சனாதிபதி செயலாளர்.

2011, சனவரி 25.

2-259

---

## அரச தொழிற்சாலைத் திணைக்களம்

இயந்திர அதிகாரி II "ஆ" பதவி

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் இயந்திர அதிகாரி II "ஆ" (இலங்கை தொழிநுட்ப சேவை) மூன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளைப் பூரணப்படுத்தியிருக்கும் இலங்கை ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. **விண்ணப்பங்களை முன்வைக்கவேண்டிய முறை :**

1.1 இதன் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் தின்படி "ஏ4" அளவுடைய தாளில் இரு பக்கங்களைப் பயன்படுத்தி ஒழுங்மைத்துக்கொண்ட விண்ணப்பங்களைத் தகுந்த முறையில் பூரணப்படுத்தி "தொழிற்சாலை பொறியிய லாளர், அரச தொழிற்சாலை, கொலொன்னாவை" என்ற முகவரிக்கு 2011, மாச்சு 11 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைப் போட்டு அனுப்புகின்ற தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவி தெளிவாக எழுதப்பட்டிருத்தல் அவசியம்.

1.2 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பிற்பாடாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தபாலில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதன் பொருட்டு காலநேரத்துடன் விண்ணப்பங்களை தபால் செய்யுமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவூட்டப் படுகின்றது.

1.3 விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைக்கு மாறான தகவல்கள் எதுவும் நியமனம் வழங்குவதற்கு முன்னர் வெளியானால் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்கு மாறான தகவல்கள் எதுவும் சேவையில் அமர்த்தப்பட்டதன் பின்னர் தெரியவரின் சேவை நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

**கவனத்தில் கொள்வதற்கு.**- விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது. உரிய தகைமைகள் பெற்றில்லாத விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த முறையில் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

2. **கல்வித் தகைமைகள்.**- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரு அமர்வுக்கு மேற்படாதவாறு தூயகணிதம்/பிரயோக கணிதம்/சகித கணிதம் மற்றும் பௌதிகவியல் உட்பட்டதாக மூன்று விஞ்ஞான பாடங்களில் க. பொ. த. (உயர் தர) பரீட்சையை ஒரே அமர்வில் சித்தயிடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3. **தொழில்சார் தகைமைகள்.**- கீழ்க்காணும் தொழில்சார் தகைமைகளில் ஒன்று விண்ணப்பதாரிகளால் பெறப்பட்டிருத்தல் வேண்டும் :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(ii) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளிக்கும் அதிகாரச் சபையால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியிய லாளர் டிப்ளோமா (இயந்திர)

அல்லது

(iii) தேசிய பயிலுனர் மற்றும் ரொழில்நுட்பப் பயிற்சியளிக்கும் அதிகார சபையால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியிய லாளர் டிப்ளோமா (இயந்திர)

அல்லது

(iv) தேசிய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (இயந்திர)

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தால் நடாத்தப்படு கின்ற இயந்திர பொறியியலாளர் பரிசோதனையில் I ஆம் பிரிவை சித்திகரமாக நிறைவு செய்திருத்தல்

(vi) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றுகளை வெளிப்படுத்தும் நிறுவனங்களின் கருத்து விமர்சித்ததன் பிற்பாடாக மேற்கூறப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதமாக சமனாகின்றதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள் ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகள் பெற்றி ருத்தல்.

4. **பிற தகைமைகள்**.- சிறந்த சரிதத்துடனும் நல் உடல் சௌக்கியத்துடனும் கூடிய ஆண்களாக இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- அரச நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 (IV) இல் எல்என் 3-2006ஏ இன்கீழ் ரூபா 15,005-180X4-240X6-320X11-360X20-27,885 சம்பளப் பரிமாணத்தில் அமர்த்தப்படும்.

6. **வயது எல்லை**.- 2011.03.11 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் வயது 40 இற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். (தற்போதும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருப்பின் ஆகக்கூடிய வயதெல்லை பாதிக்க மாட்டாது.)

7. **ஆட்சேர்ப்பு முறை**.- தகைமைகளுடைய விண்ணப்பதாரிகளை எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் தோற்றவைத்து, அப்பரீட்சை மூலம் ஆகக்கூடிய புள்ளிகளை ஈட்டிக்கொண்டோரை நேர்முகப் பரீட்சைக்குப் பாத்திரப்படுத்தி தகைமையுடையோர் தேர்ந்தெடுக்கப்படும். நேர்முகப் பரீட்சையின்போது ஏதேனும் புள்ளிகள் வழங்கப்படாததுடன் தகைமைகள் மாத்திரமே பரிசோதிக்கப்படும். தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளாவது பெறுதல் வேண்டும். எழுத்துமூல பரீட்சை தொடர்பான பாடங்கள் மற்றும் பாடநெறி கீழே தரப்பட்டுள்ளது :-

(1) தொழில்நுட்ப அறிவு (1 மணி நேரம்).- வார்ப்பு, இயந்திர மயப்படுத்தல், உலோக இணைப்பு, உருக்கியிணைப்பு, மோட்டார் தொழில்நுட்பம், மர தொழில்நுட்பம் மற்றும் பராமரித்தல் ஆகிய துறைகள் சார்ந்ததாக ஆட்சேர்ப்புத் தகைமைகளாகக் காட்டப்பட்டுள்ள டிப்ளோமா அல்லது அத்துடன் ஒட்டிய சான்றிதழ் பெற்றிருப்பவரிடம் இருக்க வேண்டிய தொழில்நுட்ப அறிவின் அளவைப் பரிசோதிக்கு முகமான கேள்விகள் உட்படும்.

(2) பொது அறிவு மற்றும் பொது உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) :-

* இலங்கையின் புவிச்சரிதவியல், வரலாறு, அரசியல், விளையாட்டு மற்றும் அண்மையில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் (சர்வதேசத் தளத்தில் பெற்றுள்ள வெற்றிகள் உட்பட்டதாக) மற்றும்

* உலக மட்டத்தில் நிலவிய முக்கிய சம்பவங்கள், பூகோள அடிப்படையில் ஏற்பட்ட பிரிவுகள், பிரதான நகரங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அதன் பங்களிப்பு

* விளக்கம், தர்க்கரீதியான விமர்சன அறிவு, உணர்வுச் சக்தி, உடனடியான தகுந்த தீர்மானங்களை எடுக்கும் திறமை, புள்ளிவிபர மற்றும் கணிதம் சார்ந்த சிக்கல்களைத் தீர்க்கும் திறமை, மொழிப் பகுதி, அட்டவணைகள், படங்கள், வரைபு உபயோகித்தல் மற்றும் விமர்சித்தல் ஆகியவை தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும்.

8. **அரச மொழித் தேர்ச்சிக் கொள்கையினை அமுல்படுத்தல்**.- அரச நிருவாக மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் திணைக்களத்தால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள அ. நி. சு. இல. 07/2007 இன்படி 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் சேவைக்குச் சேருகின்ற சகல அரச உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி தொடர்பான நிபுணத்துவத்தை சேவையில் சேர்ந்து 5 ஆண்டுகளினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

9. **பதவிக்கமர்த்தும் நியதிகள்** :

9.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

9.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நிருவாக விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும் நிதி ஒழுங்குகளுக்கும் அரச அல்லது சம அமைச்சு மற்றும் அரச தொழிற்சாலையினால் வெளியிடப்படுகின்ற பிற கட்டளைகளுக்கும் நிபந்தனை களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

9.3 நிருவாக விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தில் 10 இல் இருந்து 12 வரையுள்ள அத்தியாயங்களில் நிபந்தனைகளும் தொடர்புபட்டதாகும்.

9.4 நியமனம் மூவாண்டு நன்நடத்தை காலத்திற்கு கட்டுப்படும்.

10. அரச மற்றும் மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்கள அதிபர் மூலம் இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டபிள்யு. எம். கே. பீ. எஸ். ஆர். பெர்னான்டோ,
தொழிற்சாலை பொறியியலாளர்.

அரச தொழிற்சாலை,
கொலொன்னாவை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச தொழிற்சாலை திணைக்களம்**

இயந்திர அதிகாரி II "ஆ" பதவி

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியாக வரும் பெயர் :----.
(ii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. முகவரிகளும் தொலைபேசி இலக்கங்களும் :-
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) தொலைபேசி இலக்கம் :----.
(முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் உடனடியாக அறிவித்தல் வேண் டும்).

3. பிறந்த திகதி மற்றும் இடம் :----.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கான வயது :----.

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
வெளியிடப்பட்டுள்ள திகதி :----.

6. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? :----.

7. (i) பால் :----.
(ii) திருமணமானவரா/திருமணமாகாதவரா/தபுதாரரா என்பது : ----.

8. கல்வித் தகைமைகள் :-

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்திகள் | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

9. தொழில்சார் தகைமைகள் :-

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்திகள் | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. ஏனைய தகைமைகள் :----.

11. இனம் :

சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
இலங்கை முஸ்லிம் - 4
இந்திய தோற்றமுள்ளவர் - 5
ஏனையோர் - 6

(கூட்டினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

என்னால் மேலே கூறப்பட்டுள்ளவை யாவும் உண்மையானதும், சரியானதும் என உறுதிகூறுகின்றேன். மேலும், இவ்விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது செய்யப்படுவதற்கு தகைமையற்றதாகும் என நான் நன்கு அறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவரின் எந்தவித நஷ்டஈடுமின்றி உத்தியோகம் முடிவடைவதற்கு உரிய காரணமாக அமையும் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பிரிவு தொடர்புபடுவது அரச தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கும் பயிற்சிப் பெறுவோருக்கும் மட்டுமே)

**திணைக்கள/நிறுவன தலைவரின் சிபாரிசு :**

அரச தொழிற்சாலை திணைக்களத்தின் இயந்திர அதிகாரி II "ஆ" பதவிக்கு விண்ணப்பிக்கின்ற ...................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/நிறுவனத்தில் தொழில் புரியும் திரு./திருமதி/செல்வி .......................................... அவர்கள் தற்போது .............................. பதவியில் சேவையாற்றுகின்ற / பயிற்சிபெறுகின்ற இவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானவை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

2-271

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி சேவையின் III ஆம் வகுப்பில்
(விசேட ஊழியப் படையில்) பதவிக்கு இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2011

2011, சனவரி மாதம் 14 ஆந் திகதிய 1689 ஆம் இலக்கம் கொண்ட அரச வர்த்தமானியின் பகுதி : I தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்படும் "பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்" பகுதியில் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பில் (விசேட ஊழியப் படையில்) பதவிக்கு இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தலில் -

